# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP – II & IIA PRELIMINARY EXAM

## பொதுத்தமிழ்-பகுதி-ஆ-இலக்கியம்

## அலகு – 1

## திருக்குறள்

### 1. அன்புடைமை

1. **அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
   **புன்கணீர் பூசல் தரும்.***

   பொருள்: அன்பை அடைத்து வைக்க தாழ்ப்பாள் இல்லை; அன்புக்கு உரியவரின் துன்பத்தைப் பார்த்ததுமே அன்பு, கண்ணீராக வெளிப்பட்டு நிற்கும்.

   (ஆர்வலர் — அன்புடையவர்; புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்; பூசல் தரும் — வெளிப்பட்டு நிற்கும்.)

2. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
   **என்பும் உரியர் பிறர்க்கு.**

   பொருள்: அன்பில்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கு மட்டும் உரியது என்று எண்ணுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

   (என்பு – எலும்பு. இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது.)

3. **அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு**
   **என்போடு இயைந்த தொடர்பு.**

   பொருள்: உடம்போடு உயிர் இணைந்து இருப்பதனைப்போல, வாழ்க்கை நெறியோடு அன்பு இணைந்து இருக்கிறது.

   (வழக்கு – வாழ்க்கைநெறி; ஆருயிர் – அருமையான உயிர்; என்பு – எலும்பு.)

4. **அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
   **நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.**

   பொருள்: அன்பு விருப்பத்தைத் தரும். விருப்பம் அனைவரிடமும் நட்புக்கொள்ளும் பெருஞ்சிறப்பைத் தரும்.

   (ஈனும் – தரும்; ஆர்வம் – விருப்பம்; வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்பது பொருள். நண்பு – நட்பு.)

5. **அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு.**

பொருள்: அன்போடு பொருந்திய வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்தவர் உலகத்தில் மகிழ்ச்சி உடையவர் ஆவர். (வையகம் – உலகம்; என்ப – என்பார்கள்.)

6. **அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

பொருள்: அன்பு அறத்தை மட்டும் சார்ந்தது என்று கூறுவோர் அறியாதவர்; வீரத்திற்கும் அன்புதான் துணை. (மறம் - வீரம்; கருணை, வீரம் இரண்டிற்குமே அன்புதான் அடிப்படை என்பது பொருள்.)

7. **என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**

பொருள்: எலும்பு இல்லாத உயிர்களை வெயில் வருத்தி அழிப்பதுபோல, அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தி அழிக்கும்.
(என்பிலது – எலும்பு இல்லாதது (புழு); அன்பிலது – அன்பில்லாத உயிர்கள்.)

8. **அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்த் தற்று.**

பொருள்: பாலை நிலத்தில் உள்ள வாடிப்போன மரம் தளிர்க்காது. அதுபோல, நெஞ்சில் அன்பு இல்லாத மனிதர் வாழ்க்கை தளிர்க்காது.
(அன்பகத்து இல்லா அன்பு + அகத்து + இல்லா — அன்பு உள்ளத்தில் இல்லாத; வன்பாற்கண் – வன்பால் + கண் – பாலை நிலத்தில். தளிர்த்தற்று – தளிர்த்து + அற்று – தளிர்த்ததுபோல; வற்றல்மரம் – வாடிய மரம்.)

9. **புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.**

பொருள்: நெஞ்சில் அன்பு இல்லாதவர்க்குக் கை, கால் முதலிய உடல் உறுப்புகளால் என்ன பயன் ?

(புறத்துறுப்பு -உடல் உறுப்புகள்; எவன் செய்யும் – என்ன பயன் ?; அகத்துறுப்பு - மனத்தின் உறுப்பு, அன்பு.)

10. **அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

பொருள்: அன்பு செய்வதுதான் உடம்பில் உயிர் இருப்பதற்கு அடையாளம். அன்பில்லாதவர் உடம்பு வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புதான். அங்கு உயிர் இல்லை.

## 2. பண்புடைமை

1. **எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

பொருள்: யாரிடத்தும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைதல் எளிது.

**சொற்பொருள்:** வழக்கு – நன்னெறி.

2. **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

பொருள்: அன்புடையவராகத் திகழ்தல், உயர்ந்த குடிப்பிறப்பு ஆகிய இவ்விரண்டும் பண்பாளரின் இயல்பு.

**சொற்பொருள்:** ஆன்ற - உயர்ந்த.

3. **உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

**பொருள்:** உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று. பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே மக்களாகக் கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

4. **நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

**பொருள்:** நேர்மையையும் அறத்தையும்கொண்டு பிறருக்கு உதவுதல் வேண்டும். அத்தகைய பண்பாளரையே உலகம் போற்றும்.

**சொற்பொருள்:** நயன் - நேர்மை; நன்றி - உதவி.

5. **நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு. ***

**பொருள்:** விளையாட்டாக ஒருவரை இகழ்ந்து பேசுதலும் துன்பத்தைத் தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிருப்பினும் நல்ல பண்புகள்
இருக்கும்.

**சொற்பொருள்:** நகையுள்ளும் - விளையாட்டாகவும்; பாடறிவார் – நெறியுடையார்.

6. **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன். ***

பொருள்: உலகம் பண்புடையவர்களாலே நிலைபெற்று இருக்கிறது. இல்லையெனில், இவ்வுலகம் மண்ணோடு மண்ணாகிஅழிந்துவிடும்.

**சொற்பொருள்:** மாய்வது –அழிவது.

7. **அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்(பு) இல்லா தவர். ***

**பொருள்:** அரம்போன்ற கூர்மையான அறிவுடையாராக இருப்பினும், மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரமாகவே கருதப்படுவார்.

**சொற்பொருள்:** அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி.

8. **நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்**
**பண்பாற்றா ராதல் கடை.**

**பொருள்:** நட்புக்கொள்ள இயலாதவராய்த் தீங்கு செய்பவரிடத்திலும் பண்புடையவராய்ப் பழக இயலாதது இழிவான செயலாகும்.

**சொற்பொருள்:** நண்பு – நட்பு; நயம்இல – தீங்கு, இனிமையற்ற; கடை – இழிவு.

9. **நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன் றிருள்.**

**பொருள்:** பிறரோடு பழகிப் பேசிச் சிரித்து மகிழ இயலாதவருக்கு மிகப்பெரிய இவ்வுலகம் பகலிலும் இருளாகவே தோன்றும்.

**சொற்பொருள்:** நகல்வல்லர் – சிரித்து மகிழ்பவர்; மாயிரு ஞாலம் – மிகப்பெரிய உலகம்.

10. **பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

பொருள்: பண்பிலாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிந்ததுபோன்றது.

**சொற்பொருள்:** திரிந்தற்று – திரிந்ததுபோன்றது.

## 3. கல்வி

1. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**பொருள்:** நூல்களைக் குற்றமறக் கற்றல் வேண்டும். கற்றபடி நடத்தல் வேண்டும்.

**சொற்பொருள்:** கசடு – குற்றம்; நிற்க – கற்றவாறு நடக்க.

2. **எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு.**

**பொருள்:** எண்ணும் எழுத்தும் ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு இரு கண்கள் எனக் கூறுவர்.

**சொற்பொருள்:** எண் - எண்கள், கணக்கு; எழுத்து - இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்)

3. **கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
   **புண்உடையர் கல்லா தவர்.**

   **பொருள்:** கல்வி கற்றவர் கண் உடையவர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் ஆவர்.

4. **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
   **அனைத்தே புலவர் தொழில்.**

   **பொருள்:** அறிவில் சிறந்த புலவர்களுடன் பேசிப் பழகும்போது மகிழ்ச்சியாக இருப்பதும், அவர்களை விட்டுப்பிரியும்போது, 'இனி இவரை எப்பொழுது காண்போம்' என எண்ணிப் பிரிவதும் புலவரின் இயல்பாகும்.

   **சொற்பொருள்:** உவப்ப - மகிழ; தலைக்கூடி - ஒன்றுசேர்ந்து.

5. **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
   **கடையரே கல்லா தவர்.**

   **பொருள்:** செல்வம் உடையவர்முன் ஏழை கவலைப்பட்டு இரந்து நிற்பதுபோலக் கற்றவர்முன் பணிந்து கற்பவரே உயர்ந்தவர்; பணிந்து கல்லாதவர் தாழ்ந்தவர்.

   **சொற்பொருள்:** உடையார் - செல்வர்; இல்லார் ஏழை; ஏக்கற்று - கவலைப்பட்டு; கடையர் - தாழ்ந்தவர்.

6. **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
   **கற்றனைத்து ஊறும் அறிவு.**

   **பொருள்:** மணற்பாங்கான இடத்தில் தோண்டத்தோண்ட நீர் சுரக்கும். அதுபோல, மக்கள் நூல்களைக் கற்கக்கற்க அவர்தம் அறிவு வளரும்.

   **சொற்பொருள்:** தொட்டனைத்து - தோண்டும் அளவு; மாந்தர் - மக்கள்.

7. **யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**

**சாந்துணையும் கல்லாத வாறு.**

**பொருள்:** கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாகும்; எந்த ஊரும் தன் ஊராகும். இதனை அறிந்தும் சிலர் சாகும்வரை கற்காமல் இருப்பது ஏன்?

**சொற்பொருள்:** சாந்துணையும் – சாகும்வரையிலும்.

8. **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

**பொருள்:** ஒரு பிறப்பில், தான் கற்றுக்கொள்ளும் நல்லறிவு, இனி எழும் பிறவிகளுக்கும் பாதுகாப்பைத் தரும்.

**சொற்பொருள்:** ஏமாப்பு – பாதுகாப்பு.

9. **தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**

**காமுறுவர் கற்றறிந் தார்.**

**பொருள்:** தாங்கள் இன்பம் அடையும் கல்வியால் உலகம் இன்பம் அடைவதனைக் கண்டு, கற்றவர் மேன்மேலும் கற்க விரும்புவர்.

**சொற்பொருள்:** காமுறுவர் – விரும்புவர்.

10. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை.**

**பொருள்:** ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியாகும். கல்வி தவிர, மற்றச் செல்வங்கள் எல்லாம் செல்வங்கள் ஆகமாட்டா.

**சொற்பொருள்:** விழுச்செல்வம் – சிறந்த செல்வம்; மாடு – செல்வம்.

## 4. கேள்வி

(சான்றோர் உரைகளைக் கேட்டல்)

1. **செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்**
   **செல்வத்துள் எல்லாம் தலை.**

   **பொருள்:** செல்வங்களுள் சிறந்தது கேள்விச் செல்வம். அதுவே செல்வங்கள் அனைத்திலும் முதன்மையானது.

   **சொற்பொருள்:** செவிச்செல்வம் — கேள்விச்செல்வம்; தலை — முதன்மை.

2. **செவிக்குணவு இல்லாத போழ்து, சிறிது**
   **வயிற்றுக்கும் ஈயப் படும். ***

   **பொருள்:** செவிக்குணவாகிய நல்லறிவு கிடைக்காதபொழுதில் வயிற்றுக்கும் சிறிதளவு உணவு அளிக்கப்படும்.

   **சொற்பொருள்:** போழ்து - பொழுது; ஈயப்படும் - அளிக்கப்படும்.

   **இலக்கணக்குறிப்பு:** வயிற்றுக்கும் - இழிவுச்சிறப்பும்மை.

   பிரித்தறிதல் : செவிக்குணவு = செவிக்கு + உணவு.

   (இவ்விரு குறட்பாவும் கேள்வியின் சிறப்பினைக் கூறுகின்றன.)

3. **செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்**
   **ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**

   பொருள்: செவி உணவாகிய கேள்வியினை உடையவர் இவ்வுலகில் வாழ்ந்தாலும், அவர், அவி உணவைக் கொள்ளும் தேவர்களுக்கு ஒப்பாவர்.

   **சொற்பொருள்:** அவி உணவு - தேவர்களுக்கு வேள்வியின்பொழுது கொடுக்கப்படும் உணவு. ஆன்றோர் - கல்வி, கேள்வி, பண்பு ஆகியவற்றில் சிறந்தோர்; ஒப்பர் - ஒப்பாவர்.

   **இலக்கணக்குறிப்பு:** அவியுணவு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

   (இக்குறள் கேள்வி அறிவுடையவரின் சிறப்பினைக் கூறுகிறது.)

4. **கற்றிலன் ஆயினும் கேட்க, அஃதொருவற்(கு)**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

பொருள்: ஒருவன் கற்க வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கற்றாரிடம் சென்று கேட்டறிதல்வேண்டும். வாழ்க்கையில் தளர்ச்சியுறும்போது அக்கேள்வியறிவானது, அவனுக்கு ஊன்றுகோல்போலத் துணையாக நிற்கும்.

**சொற்பொருள்:** ஒற்கம் – தளர்ச்சி.

**இலக்கணக்குறிப்பு:** ஊற்று – ஊன்று என்பதன் வலித்தல் விகாரம்.

பகுபத உறுப்பிலக்கணம்: கேட்க - கேள் (ட்) + க. கேள் - பகுதி; ள் – ட் ஆனது விகாரம்; க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

5. **இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

பொருள்: வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் உதவுவதுபோல, நல்லொழுக்கம் மிக்க பெரியோரின் வாய்ச்சொற்கள் வாழ்க்கைக்கு என்றும் உதவும்.

**சொற்பொருள்:** ஊற்றுக்கோல் – ஊன்றுகோல்; அற்றே – போன்றதே.

**இலக்கணக்குறிப்பு:** இழுக்கல், ஒழுக்கம் - தொழிற்பெயர்கள்; ஊற்றுக்கோல் - ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம். அணி: உவமையணி.

6. **எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

பொருள்: எவரும் அறிஞரின் நல்லுரைகளைக் கேட்டல் வேண்டும். அந்நல்லுரை எவ்வளவு சிறிதாயினும் அதனைக் கேட்ட அளவிற்கு நிறைந்த பெருமையை அது தேடித் தரும்.

**சொற்பொருள்:** எனைத்தானும் - எவ்வளவு சிறிதாயினும்; அனைத்தானும் - கேட்ட அளவிற்கு; ஆன்ற – நிறைந்த.

**இலக்கணக்குறிப்பு:** ஆன்றபெருமை – பெயரெச்சம்.

7. **பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)**
**ஈண்டிய கேள்வி யவர்.**

பொருள்: நுட்பமாக ஆய்ந்தறிந்த கேள்வி அறிவுடையோர், சொல்பவரின் கருத்தைத் தவறாக உணர்ந்திருந்தாலும் ஒருபொழுதும் தீயசொற்களைக் கூறமாட்டார்.

**சொற்பொருள்:** பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்; பேதைமை - அறியாமையின்பாற்பட்ட தீயசொற்கள்; இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து; ஈண்டிய - ஆய்ந்தறிந்த.

**பகுபத உறுப்பிலக்கணம்:** உணர்ந்து உணர் + த் (ந்) + த் + உ. உணர் - பகுதி; த் - சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை; உ வினையெச்ச விகுதி.

(இந்நாலு குறட்பாவும் கேட்பதனால் வரும் நன்மைகளைக் கூறுகின்றன.)

8. **கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

பொருள்: கேள்வியால் துளைக்கப்படாத செவிகளுக்குக் கேட்கும் தன்மை இருப்பினும் கேளாத செவிகளாகவே கருதப்படும்.

**சொற்பொருள்:** தகையவே - தன்மையதே; தோட்கப்படாத - துளைக்கப்படாத.

**இலக்கணக்குறிப்பு:** கேளாத்தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

9. **நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**

பொருள்: நுட்பமாகிய கேள்வியறிவு இல்லாதவர் பணிவான சொற்களைப் பேசுபவரைக் காண்பது அரிது.

**சொற்பொருள்:** நுணங்கிய - நுட்பமாகிய; வணங்கிய — பணிவான.

**10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**

**அவியினும் வாழினும் என்.**

பொருள்: கேள்வியின் வாயிலாகச் செவிச்சுவை உணராது, உணவின் வாயிலாக வாய்ச்சுவை மட்டுமே உணரும் மக்கள் இறந்தாலும் என்ன? வாழ்ந்தாலும் என்ன?

**சொற்பொருள்:** வாயுணர்வின் மாக்கள் - வாய்ச்சுவை மட்டுமே அறிந்தோர்; அவியினும் – இறந்தாலும்.

**இலக்கணக்குறிப்பு:** அவியினும் வாழினும் – எண்ணும்மை.

பிரித்தறிதல்: சுவையுணரா = சுவை + உணரா; வாயுணர்வு வாய் + உணர்வு.

(இம்மூன்று குறட்பாவும் கேளாதவழி ஏற்படும் குற்றங்கள்பற்றிக் கூறுகின்றன.)

## 5. அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகாஅரண்.

சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

**அருஞ்சொற்பொருள்**

அறிவுடைமை: (கல்வி கேள்விகளினாய அறிவோடு உண்மை அறிவுடையனாதல்)

குறள் 1 – இதனால் அறிவின் சிறப்புக் கூறப்பட்டது.

குறள் 2,3,4,5,6 – இவ்வைந்து பாட்டாலும் அறிவின் இலக்கணம் கூறப்பட்டது.

குறள் 7,8 – இவ்விரண்டு பாட்டாலும் அறிவுடையாரது இலக்கணம் கூறப்பட்டது.

குறள் 9 – இதனால் அறிவுடையார்க்குத் துன்பம் இன்மை கூறப்பட்டது.

குறள் 10 – இதனால் அறிவுடையாரது உடைமையும் ஏனையாரது இன்மையும் கூறப்பட்டன.

1. அற்றம் = அழிவு; இறுதி; செறுவார்க்கு = பகைவர்க்கு; அரண் = கோட்டை.
2. ஓரீஇ = நீக்கி; உய்ப்பது = செலுத்துவது; விடா - விடாமல்.
3. மெய்ப்பொருள் = உண்மைப்பொருள்; காண்பது = (காணுதல்) காணவல்லது அறிவு.
4. எண்பொருளவாக = எளியபொருள் ஆமாறு; நுண்பொருள் = நுட்பமான பொருள்; செலச் சொல்லி = மனங்கொள்ளச் சொல்லி.
5. தழீஇயது = நட்பாக்குவது; ஒட்பம் = அறிவுடைமை; கூம்பல் = குவிதல், முகம் வாடுதல்; மலர்தல் = விரிதல், முகம் மலர்தல்.
6. உறைவது = ஒழுகுவது.
7. ஆவது - பின்னர் வரக்கூடியது; அறிகல்லாதவர் - அறியமாட்டாதார்.
8. பேதைமை = அறிவுஇன்மை; அறிவார் = அறிவுடையவர்; அஞ்சல் = எண்ணிப் பார்த்து அதனைச் செய்யாது விடுதல். செய்யப் பயப்படுதல் (ஒன்றனைச் செய்யப் பயப்படுதலை அஞ்சல் என்பர்).
9. எதிரது = எதிர்காலத்தில் நேரக்கூடியது; அதிர = நடுங்குபடி; நோய் = துன்பம்,
10. என்னுடையரேனும் = எல்லாம் உடையராயினும்; இலர் = இல்லாதவர்;

**இலக்கணம்**

1. அற்றம் – தொழிற்பெயர்; அழிக்கலாகா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
2. ஓரீஇ - சொல்லிசை அளபெடை; உய்ப்பது - வினையாலணையும் பெயர்; சென்ற இடத்தால் - உருபு மயக்கம் (ஏழன் உருபு நிற்க வேண்டிய இடத்தில் மூன்றன் உருபு நின்றது).
3. யார் யார் - அடுக்குத்தொடர்.
4. எண்பொருள், நுண்பொருள் - பண்புத்தொகைகள்; செல - வினையெச்சம்.
5. தழீஇ – சொல்லிசையளபெடை; மலர்தல், கூம்பல் - தொழிற்பெயர்கள்; மலர்தலும் கூம்பலும் - எண்ணும்மை
6. எவ்வதுறைவது - வினையாலணையும் பெயர்; அவ்வதுறைவது – தொழிற்பெயர்.

7. அறிகல்லாதவர் - வினையாலணையும் பெயர்.
8. அஞ்சுவது - வினையாலணையும் பெயர்; அஞ்சாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்; அஞ்சல் - தொழிற்பெயர்; அறிவார்தொழில் - ஆறாம் வேற்றுமைத்தொகை.
9. அதிர – வினையெச்சம்.
10. உடையார், இலர் - குறிப்பு வினைமுற்றுகள்;

**6. அடக்கமுடைமை**

1. **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
   **ஆரிருள் உய்த்து விடும்.**

   **அருஞ்சொற்பொருள்:** அடக்கம் = மனம் மொழி மெய்கள் தீயவழிகளிற் செல்லாது அடங்குதல்; அமரருள் = தேவர் உலகம் (சுவர்க்கம்); உய்க்கும் = செலுத்தும்; ஆரிருள் = நரகம்; உய்த்துவிடும் என்பதை ஒரு சொல்லாகக் கொள்க.

   இலக்கணம்: அடங்காமை – எதிர்மறைத் தொழிற்பெயர். ஆரிருள் – பண்புத்தொகை.

2. **காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்**
   **அதனினூஉங் கில்லை உயிர்க்கு**

   **அருஞ்சொற்பொருள்:** பொருளா = உயர்ந்த பொருளாகக் கருதி; காக்க = கடைப்பிடித்து ஒழுகுக; அதனின் ஊங்கு அவ் அடக்கத்தைவிடவும்.

   **இலக்கணம்:** காக்க - வியங்கோள் வினைமுற்று; பொருளா – (பொருளாக என்பதன்) தொகுத்தல்விகாரம்; அதனினூஉங்கு - இன்னிசையளபெடை.

3. **செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
   **தாற்றி னடங்கப் பெறின்**

   **அருஞ்சொற்பொருள்:** செறிவு = அடக்கம் ; சீர்மை = விழுப்பம், சிறப்பு ; அறிவறிந்து = அடங்கியிருத்தலே அறிவாவது என்றறிந்து; ஆற்றின் =நேரியவழியில்.

   இலக்கணம்: பெறின் - செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

4. **நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்**
   **மலையினும் மாணப் பெரிது**

   **அருஞ்சொற்பொருள்:** நிலையின் (இல்லறநெறியாகிய) நிலையின் நின்று; திரியாது - நிலைபிறழாது; தோற்றம் = உயர்வு; மாண = மிகவும்.

   **இலக்கணம்:** அடங்கியான் - வினையாலணையும் பெயர்; மலையினும் - உயர்வு சிறப்பும்மை.

5. **எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்**
   **செல்வர்க்கே செல்வந் தகைத்து.**

   **அருஞ்சொற்பொருள்:** நன்று ஆம் = நன்மைதருவதே ஆம்; பணிதல் = அடங்குதல்; செல்வந்தகைத்து = செல்வம் எனத்தகும் சிறப்பினையுடைத்து.

   **இலக்கணம்:** எல்லார்க்கும் – முற்றும்மை; பணிதல் - தொழிற்பெயர்; தகைத்து - குறிப்பு வினைமுற்று; நன்றாம் – (நன்றாகும்) தொகுத்தல் விகாரம்; செல்வர்க்கே - தேற்றேகாரம்.

6. **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
   **எழுமையும் ஏமாப் புடைத்து**

   **அருஞ்சொற்பொருள்:** ஐந்து = ஐம்பொறிகள்; ஒருமை = ஒரு பிறப்பு; எழுமை = ஏழு பிறப்பு; ஏமாப்பு= பாதுகாப்பு.

   **இலக்கணம்:** உடைத்து - குறிப்பு வினைமுற்று; உவமையணி.

7. **யாகாவா ராயினு நாகாக்க; காவாக்கால்**
   **சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

   யா = எவற்றை (எல்லாவற்றையும்); சோகாப்பர் = துன்புறுவர். சொல்இழுக்கு = சொற்குற்றம்; சோகாப்பர் என்பது ஒரு சொல்.

   **இலக்கணம்:** எழுமை, ஐந்து – ஆகுபெயர்கள்; காவாக்கால் - எதிர்மறை வினையெச்சம்.

8. **ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்**

**அருஞ்சொற்பொருள்:** ஒன்றானும் = (எண் அளவில்) ஒன்றாக இருப்பினும்; பொருட்பயன் பொருளால் விளைவது (பொருளால் வரும் துன்பம்); உண்டாயின் = உண்டாவது ஆயின்; நன்றாகாது ஆகிவிடும் = தீதாகிவிடும்.

**இலக்கணம்:** பொருட்பயன் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; ஆனும் ஆயினும் என்பதன் விகாரம்; நன்று - (நன்மை) பண்புப்பெயர்;

9. **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

**அருஞ்சொற்பொருள்:** உள் ஆறும் (உடம்பில் புண்ணாக நிற்பினும்) உள்ளத்தே ஆறிவிடும்; நாவினால் = கடுஞ்சொற்களால்; வடு = தழும்பு; வேற்றுமையணி. ஆறிவிடும் தன்மையது ஆதலால் தீயினாற் சுட்டதனைப் புண் என்றும் ஆறாது நெஞ்சினுள்ளே கிடத்தலின் நாவினாற் சுட்டதனை வடு என்றும் கூறினார்.

**இலக்கணம்:** தீயினாற் … வடு. வேற்றுமையணி (தீப்புண், கடுஞ்சொல்லால் உண்டாகிய புண் இரண்டும் சுடுகையால் ஒன்றே என்று முதலிற் கூறி ஒற்றுமைப்படுத்திப், பின் தீப்புண் ஆறிவிடும். நாவினாற் சுட்டது ஆறாது என்று வேறுபடுத்தலின் வேற்றுமையணியாயிற்று சுட்ட புண், சுட்ட வடு. – பெயரெச்சங்கள்.

10. **கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

**அருஞ்சொற்பொருள்:** கதம்- சினம்; காத்து = அடக்கி ; செவ்வி = தகுந்த காலம் ; அறம் ; = அறக்கடவுள்; ஆற்றின் = அடையும் வழியில்

**இலக்கணம்:** அடங்கல் – தொழிற்பெயர், ஆற்றுவான் - வினையாலணையும் பெயர்.

## 7. ஒழுக்கமுடைமை

(நல்ல நடத்தை உடையவராதல்)

**1. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்.**

**பொருள்:** ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே; ஆதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல்வேண்டும்.

**சொற்பொருள்:** விழுப்பம் – சிறப்பு; ஓம்பப்படும் – காத்தல்வேண்டும்.

**இலக்கணக்குறிப்பு:** ஒழுக்கம் - தொழிற்பெயர்; படும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

**2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அஃதே துணை.**

**பொருள்:** எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது, அதனை விரும்பிக் காத்தல்வேண்டும்.

**சொற்பொருள்:** பரிந்து – விரும்பி; தேரினும் – ஆராய்ந்து பார்த்தாலும்.

**இலக்கணக்குறிப்பு:** காக்க - வியங்கோள் வினைமுற்று; பரிந்து, தெரிந்து - வினையெச்சங்கள்.

பிரித்தறிதல் : பரிந்தோம்பி — பரிந்து + ஓம்பி; தெரிந்தோம்பி – தெரிந்து + ஓம்பி.

(இவ்விரு பாடலும் ஒழுக்கத்தின் உயர்வைக் கூறுகின்றன.)

**3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**

**இழிந்த பிறப்பாய் விடும்.**

**பொருள்:** ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர். அவ்வொழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.

**சொற்பொருள்:** குடிமை – உயர்குடி; இழுக்கம் ஒழுக்கம் இல்லாதவர்.

**இலக்கணக்குறிப்பு:** இழிந்த பிறப்பு – பெயரெச்சம்.

**4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**

**பொருள்:** ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் குறைந்தால், அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்.

**இலக்கணக்குறிப்பு:** கெடும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; கொளல் – அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

**5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.**

**பொருள்:** பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

**சொற்பொருள்:** அழுக்காறு – பொறாமை; ஆக்கம் – செல்வம்.

**இலக்கணக்குறிப்பு:** உடையான் – வினையாலணையும் பெயர்.

அணி : உவமையணி.

**6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக் கறிந்து.**

**பொருள்:** ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.

**சொற்பொருள்:** ஒல்கார் – விலகமாட்டார்; உரவோர் – மனவலிமையுடையோர்; ஏதம் – குற்றம்.

**இலக்கணக்குறிப்பு:** உரவோர் வினையாலணையும் பெயர்.

**7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.**

**பொருள்:** ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

**சொற்பொருள்:** எய்துவர் — அடைவர்.

**இலக்கணக்குறிப்பு:** எய்தாப் பழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எய்துவர் பலர்பால் வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம்:** எய்துவர் - எய்து + வ் + அர். எய்து - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை, அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

(இவ்வைந்து பாடலும் ஒழுக்கத்தின் குணமும், ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் குற்றமும் கூறுகின்றன.)

**8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

**பொருள்:** நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

**சொற்பொருள்:** இடும்பை - துன்பம்; வித்து - விதை.

**இலக்கணக்குறிப்பு:** நல்லொழுக்கம், தீயொழுக்கம் - பண்புத்தொகைகள்.

(இப்பாடல் ஒழுக்கத்தின் விளைவைக் கூறுகின்றது.)

**9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**

**பொருள்:** நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.

**சொற்பொருள்:** ஒல்லாவே — இயலாவே.

**இலக்கணக்குறிப்பு:** சொலல் — தொழிற்பெயர்.

**10. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார். ***

**பொருள்:** உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

**சொற்பொருள்:** உலகம் உயர்ந்தோர்; ஒட்ட - பொருந்த; ஒழுகல் - நடத்தல், வாழ்தல்.

(இவ்விரு பாடலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களைக் கூறுகின்றன.)

## 8. பொறையுடைமை

(பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்தல்)

**1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத், தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**பொருள்:** நிலமானது, தன்னைத் தோண்டுபவரையும் தாங்குவதுபோல, நம்மை இழிவுபடுத்துவோரையும் நாம் பொறுத்துக்கொள்வதே சிறந்த பண்பு.

**சொற்பொருள்:** அகழ்வாரை - தோண்டுபவரை; இகழ்வார் - இழிவுபடுத்துவோர்; தலை – சிறந்த பண்பு.

**இலக்கணக்குறிப்பு:** பொறுத்தல் - தொழிற்பெயர்; அகழ்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்கள்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** அகழ்வார் = அகழ் +வ்+ஆர். அகழ் - பகுதி;வ் - எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

அணி : உவமையணி.

**2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**

**மறத்தல் அதனினும் நன்று.**

**பொருள்:** பிறர் செய்யும் துன்பத்தை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் சிறந்தது; அதனைவிடச் சிறந்தது அத்துன்பத்தை மறந்துவிடுதல்.

**சொற்பொருள்:** பொறுத்தல் – பொறுத்துக்கொள்ளுதல்; இறப்பினை - பிறர் செய்த துன்பத்தை.

**இலக்கணக்குறிப்பு:** மறத்தல், பொறுத்தல் – தொழிற்பெயர்கள்; நன்று - குறிப்பு வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்: மறத்தல் = மற + த் + தல். மற பகுதி; த் - சந்தி; தல் – தொழிற்பெயர் விகுதி.

**3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**

**வன்மை மடவார்ப் பொறை.**

**பொருள்:** விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

**சொற்பொருள்:** இன்மை – வறுமை; ஓரால் – தவிர்த்தல்; மடவார்–அறிவற்றார்.

**இலக்கணக்குறிப்பு:** விருந்து - பண்பாகு பெயர்; ஓரால், பொறை - தொழிற்பெயர்கள்.

அணி : எடுத்துக்காட்டு உவமையணி.

**4. நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை**

**போற்றி ஒழுகப் படும்.**

**பொருள்:** நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்கவேண்டுமானால், பொறுமையை நாம் போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**சொற்பொருள்:** நிறை - சால்பு.

**இலக்கணக்குறிப்பு:** நீங்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர்; போற்றி - வினையெச்சம்.

(இந்நாலு குறட்பாவும் பொறுமையின் சிறப்பினைக் கூறுகின்றன.)

**5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்**

**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

**பொருள்:** பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் தண்டிப்பவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்;ஆனால், பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துக்கொள்வர்.

**சொற்பொருள்:** ஒறுத்தாரை - தண்டித்தவரை; ஒன்றாக ஒரு பொருட்டாக; பொதிந்து வைப்பர் - (மனத்துள்) வைத்துக்கொள்வர்.

**இலக்கணக்குறிப்பு:** ஒறுத்தார் - வினையாலணையும் பெயர்; பொதிந்து - வினையெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** வைப்பர் = வை + ப் + ப் + அர். வை பகுதி; ப் - சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**6. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்**

**பொன்றும் துணையும் புகழ்.**

**பொருள்:** பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக்கொள்ளாது தண்டித்தவர்க்கு ஒரு நாள் மட்டுமே இன்பம் கிட்டும்; அதனைப் பொறுத்துக்கொண்டவரின் புகழ், உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

**சொற்பொருள்:** பொன்றும் துணையும் - உலகம் உள்ளவரை.

**இலக்கணக்குறிப்பு:** ஒறுத்தார், பொறுத்தார் – வினையாலணையும் பெயர்கள்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** ஒறுத்தார் = ஒறு + த் + த் + ஆர். ஒறு - பகுதி; த் - சந்தி; த் - இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

**7. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)**

**அறனல்ல செய்யாமை நன்று.**

பொருள்: செய்யத்தகாத துன்பச் செயல்களைப் பிறர் தனக்குச் செய்தாலும், தான் அத்துன்பத்துக்கு வருந்தி, அறத்துக்கு மாறான செயல்களை அவருக்குச் செய்யாதிருத்தல் நல்லது.

**சொற்பொருள்:** திறனல்ல – செய்யத்தகாத; நோநொந்து - துன்பத்துக்கு வருந்தி.

**இலக்கணக்குறிப்பு:** தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை; செய்யினும் - இழிவுச் சிறப்பும்மை; நொந்து - வினையெச்சம்; அறன், திறன் - ஈற்றுப்போலிகள்.

**8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**

**தகுதியான் வென்று விடல்.**

பொருள்: செருக்கினால் தீமை செய்தாரையும் தத்தம் பொறுமையினால் வெற்றி கொள்ளல் வேண்டும்.

**சொற்பொருள்:** மிகுதியான்-மனச்செருக்கால்; மிக்கவை -தீமை;தகுதியான்-பொறுமையால்.

**இலக்கணக்குறிப்பு:** செய்தாரை - வினையாலணையும் பெயர்; விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

(இந்நாலு குறட்பாவும் பிறர் செய்த தீங்கினைப் பொறுத்துக்கொள்ளுதல்பற்றிக் கூறுகின்றன.)

**9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

**பொருள்:** வரம்புகடந்து பேசுவோரின் தீய சொற்களையும் பொறுத்துக்கொள்பவரே பற்றற்ற துறவியரினும் மேலானவர்.

**சொற்பொருள்:** துறந்தார் - பற்றினை விட்டவர்; இறந்தார் - வரம்பு கடந்தவர்; இன்னா – தீய; நோற்கிற்பவர் - பொறுப்பவர்.

**இலக்கணக்குறிப்பு:** இறந்தார், துறந்தார், நோற்கிற்பவர் - வினையாலணையும்பெயர்கள்; இன்னாச்சொல் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்: இறந்தார் = இற + த் (ந்) + த் + ஆர். இற - பகுதி; த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் - இறந்த கால இடைநிலை; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

**பொருள்:** உண்ணாநோன்பு மேற்கொள்ளும் பெரியவர்களைவிடத் தம்மை இகழ்வோரின் தீயசொற்களைப் பொறுத்துக்கொள்பவரே மேலானவர் ஆவார்.

**சொற்பொருள்:** நோற்பார் - நோன்பு மேற்கொள்பவர்; இன்னாச்சொல் – தீய சொல்.

**இலக்கணக்குறிப்பு:** உண்ணாது - வினையெச்சம்.

(இவ்விரு குறட்பாவும் பிறரின் இழிச்சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதல் பற்றிக் கூறுகின்றன.)

## 9. நட்பு

**1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**

**வினைக்கரிய யாவுள காப்பு.**

**பொருள்:** நட்டைப்போலச் செய்துகொள்வதற்கு அரிய உறவுகள் எவையும் இல்லை. அந்த நட்டைப்போலச் செய்கின்ற செயலுக்குச் சிறந்த பாதுகாப்பு வேறு எவையும் இல்லை.

**சொற்பொருள்:** வினை – செயல்; காப்பு – காவல்.

**2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**

**பின்நீர பேதையார் நட்பு.**

**பொருள்:** அறிவுடையவர்களின் நட்பு வளர்பிறைபோல நாளும் வளரும்; அறிவிலார் நட்பு தேய்பிறைபோல நாளும் தேயும்.

**சொற்பொருள்:** நீரவர் – அறிவுடையார்; கேண்மை – நட்பு ; பேதையார் – அறிவிலார்.

**3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**

**பண்புடை யாளர் தொடர்பு.**

**பொருள்:** நல்ல நூல்களின் பொருள் கற்கக்கற்க இன்பந்தரும். அதுபோல, பண்புடையாரின் நட்பானது பழகப்பழக இன்பம் தரும்.

**சொற்பொருள்:** நவில்தொறும் – கற்கக்கற்க; நயம் – இன்பம்.

**4. நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**

**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

**பொருள்:** நட்பு என்பது, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டுமன்று; நண்பரிடத்துத் தவறு காணும்போது, அவரைக் கடிந்துரைத்துத் திருத்தி நல்வழிப்படுத்துதலும் ஆகும்.

**சொற்பொருள்:** நகுதல் - சிரித்தல்; நட்டல் - நட்புக்கொள்ளுதல்; இடித்தல் – கடிந்துரைத்தல்.

**5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

**நட்பாங் கிழமை தரும்.**

**பொருள்:** இருவர் சேர்ந்திருத்தலும் நெருங்கிப் பழகுதலும் நட்பாகாது. இருவர்தம் ஒத்த மனவுணர்வே நட்புரிமையைக் கொடுக்கும்.

**சொற்பொருள்:** கிழமை – உரிமை.

**6. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு.**

பொருள்: முகம் மட்டும் மலரும்படி நட்புக்கொள்வது நட்பாகாது; உள்ளம் மகிழும்படி அன்பாக நட்புக்கொள்வதே நல்ல நட்பு.

**சொற்பொருள்:** முகநக – முகம் மலர; அகம் – உள்ளம்.

**7. அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**

**அல்லல் உழப்பதாம் நட்பு.**

**பொருள்:** அழிவைத்தரும் துன்பங்களிலிருந்து நண்பனை விலக்கி, அவனை நல்வழியில் செலுத்துதல் வேண்டும். அவனுக்கு அழிவுநேரும்போது உடனிருந்து தானும் அதில் பங்கேற்று, அழிவிலிருந்து மீட்டல் வேண்டும்.

**சொற்பொருள்:** ஆறு – நல்வழி; உய்த்து – செலுத்தி; அல்லல் – துன்பம்.

**8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**பொருள்:** உடுத்திய ஆடை நழுவும்போது தன்னையறியாமல் கையானது, தானே சென்று காக்கும்; அதுபோல, நண்பன் துன்புறும்போது விரைந்து சென்று அவனை அத்துன்பத்திலிருந்து காப்பதே நட்பு.

**சொற்பொருள்:** உடுக்கை – ஆடை; இடுக்கண் – துன்பம்; களைவது – நீக்குவது.

**9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**

**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

பொருள்: நட்புக்குச் சிறந்த நிலை எதுவென்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், இயலும்பொழுது எல்லாம் உதவி செய்து தாங்குதல்.

**சொற்பொருள்:** கொட்பின்றி – வேறுபாடு இல்லாமல்; ஊன்றும் – தாங்கும்.

**10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**

**புனையினும் புல்லென்னும் நட்பு.**

பொருள்: இவர் எமக்கு இத்தகைய அன்பினர்; யாம் இவர்க்கு இத்துணைச் சிறப்புடையவர் எனப் புகழ்ந்து கூறினும் அது கீழான நட்பாகும்.

**சொற்பொருள்:** புனைதல் – புகழ்தல்; புல் – கீழான

## 10. வாய்மை

**1. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்**

**தீமை இலாத சொலல்.**

**பொருள்:** வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில், அது மற்றவருக்கு எவ்வகையிலும் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.

**2. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கு மெனின்.**

**பொருள்:** பிறர்க்குக் குற்றமற்ற நன்மையைத் தருமாயின், பொய்யும் உண்மையாகக் கருதப்படும்.

**சொற்பொருள்:** புரை – குற்றம்; பயக்கும் – தரும்.

**3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**

**தன்நெஞ்சே தன்னைச் சுடும். ***

**பொருள்:** தன் நெஞ்சம் அறிந்து பொய் கூறக்கூடாது. கூறின், தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

**சொற்பொருள்:** சுடும் – வருத்தும்.

**4. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**

**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

**பொருள்:** ஒருவன் தன் உள்ளம் அறிய பொய்யில்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

**5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**

**தானம்செய் வாரின் தலை.**

பொருள்: மனத்தொடு பொருந்திய வாய்மை பேசுபவன், தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுவான்.

**6. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**

**எல்லா அறமும் தரும்.**

**பொருள்:** பொய் பேசாமை ஒருவனுக்கு எல்லாப் புகழையும் தரும்; அஃது அவன் வருந்தாமலேயே அவனுக்கு எல்லா நலன்களையும் தரும்.

**சொற்பொருள்:** அன்ன – அவை போல்வன; எய்யாமை வருந்தாமை.

**7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**

**செய்யாமை செய்யாமை நன்று.**

**பொருள்:** பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடைவிடாமல் கடைப்பிடித்தால், வேறு எந்த அறங்களையும் செய்யவேண்டியது இல்லை.

**8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**

**வாய்மையால் காணப் படும்.**

**பொருள்:** உடல் தூய்மை நீரால் உண்டாகும்; உள்ளத்தூய்மை வாய்மையால் வெளிப்படும்.

**சொற்பொருள்:** அகம் உள்ளம்; அமையும் – உண்டாகும்.

**9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**

**பொய்யா விளக்கே விளக்கு.**

பொருள்: சான்றோர்க்குப் புறஇருளை நீக்கும் விளக்குகளைவிட, அகத்தின் இருளை நீக்கும் பொய்பேசாமையே உண்மையான விளக்காகும்.

**10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**

**வாய்மையின் நல்ல பிற.**

பொருள்: யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், எவ்வகையிலும் உண்மையைவிடச் சிறந்தவையாகச் சொல்லத்தக்கவை வேறில்லை.

## 11. காலமறிதல்

(செயலை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலத்தை அறிதல்)

**1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்**

**வேந்தர்க்கு வேண்டும் பொழுது. ***

**பொருள்:** பகற்பொழுதில் தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை வென்றுவிடும். அதுபோலப் பகையை வெல்லக் கருதும் வேந்தர், ஏற்ற காலம் அறிந்து செயற்படுதல்வேண்டும்.

**சொற்பொருள்:** கூகை – கோட்டான்; இகல் – பகை.

( இப்பாடல் காலமறிதலின் சிறப்பைக் கூறுகின்றது. )

**2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**

**தீராமை யார்க்குங் கயிறு.**

**பொருள்:** காலத்திற்குப் பொருந்திய செயலை மேற்கொள்வதே செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

**சொற்பொருள்:** திரு – செல்வம்; தீராமை – நீங்காமை.

**3. அருவினை என்ப உளவோ, கருவியாற்**

**காலம் அறிந்து செயின்.**

**பொருள்:** தகுந்த கருவிகளோடு ஏற்ற காலமறிந்து செயல்பட்டால், செய்தற்கரிய செயல்கள் எவையுமில்லை.

**சொற்பொருள்:** அருவினை – செய்தற்கரிய செயல்.

**இலக்கணக்குறிப்பு:** அருவினை – பண்புத்தொகை; அறிந்து – வினையெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** அறிந்து அறி + த் ( ந் ) + த் + உ. அறி பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

**4. ஞாலம் கருதினுங் கைகூடும், காலம்**

**கருதி இடத்தாற் செயின்.**

**பொருள்:** காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால், உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

**சொற்பொருள்:** ஞாலம் – உலகம்.

(இம்மூன்று பாடலும் காலமறிந்து செயல்படுதலால் ஏற்படும் பயனைக் கூறுகின்றன.)

**5. காலம் கருதி இருப்பர், கலங்காது**

**ஞாலம் கருது பவர்.**

**பொருள்:** உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் காத்திருப்பர்.

**இலக்கணக்குறிப்பு:** கலங்காது – எதிர்மறை வினையெச்சம்.

**6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**

**தாக்கற்குப் பேருந் தகைத்து.**

**பொருள்:** ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

**சொற்பொருள்:** ஒடுக்கம் – அடங்கியிருப்பது; பொருதகர் – ஆட்டுக்கடா; பேருந்தகைத்து – பின் வாங்கும் தன்மையது.

அணி : உவமையணி

( இவ்விரு பாடலும் உரிய காலத்திற்காகக் காத்திருத்தலின் சிறப்பைக் கூறுகின்றன. )

**7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**

**துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

பொருள்: அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிப்படுத்தமாட்டார்; அவரை வெல்லுதற்கான காலம் வரும்வரை, அச்சினத்தை மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்.

**சொற்பொருள்:** பொள்ளென உடனே; புறம்வேரார் - வெளிப்படுத்தமாட்டார்; உள்வேர்ப்பர் – மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்; ஒள்ளியவர் – அறிவுடையார்.

**8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**

**காணின் கிழக்காம் தலை.**

**பொருள்:** பகைவரைக் காணும்போது பணிவாக இருத்தல்வேண்டும். அப்பகைவர்க்கு முடிவுக்காலம் வரும்போது, அவர்தம் நிலைமை தலைகீழாய் மாறிவிடும்.

**சொற்பொருள்:** செறுநர் - பகைவர்; சுமக்க - பணிக; இறுவரை - முடிவுக்காலம்; கிழக்காந்தலை – தலைகீழ் (மாற்றம்)

(இவ்விரு பாடலும் பகைவரை எதிர்கொள்ளும் முறையைக் கூறுகின்றன.)

**9. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்.**

**பொருள்:** கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்தபொழுது, அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்பொழுதே செய்தற்கரிய செயல்களைச் செய்தல்வேண்டும்.

**சொற்பொருள்:** எய்தற்கு – கிடைத்தற்கு; இயைந்தக்கால் கிடைத்தபொழுது.

(இப்பாடல் காலம் வரும்போது விரைந்து செயலைச் செய்க என்பதைக் கூறுகின்றது.)

**10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து.**

**பொருள்:** வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல் அமைதியாகக் காத்திருத்தல்வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப்போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல்வேண்டும்.

**சொற்பொருள்:** கூம்பும் – வாய்ப்பற்ற; சீர்த்த இடம் உரிய காலம்.

அணி : உவமையணி.

(இப்பாடல் காத்திருத்தலையும் செயல்படுதலையும் உவமைவழி கூறுகின்றது.)

## 12. வலியறிதல்

**1. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்**
**துணைவலியுந் தூக்கிச் செயல்**

**அருஞ்சொற்பொருள்:** வினைவலி = தான் செய்யக்கருதிய செயலின் வலிமை, மாற்றான் = பகைவர்; துணை = தனக்கும் பகைவர்க்கும் துணையாயினார்; தூக்கி = சீர் தூக்கி; செயல் = செயற்படுக.

**இலக்கணம்:** வினைவலி,துணைவலி–ஆறாம்வேற்றுமைத்தொகைகள்; செயல்–வியங்கோள்வினைமுற்று.

**2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்**

**செல்வார்க்குச் செல்லாத தில்.**

**அருஞ்சொற்பொருள்:** ஒல்வது = தம்மாலியன்றது; அறிவது = அறிய வேண்டிய வலிமை; அதன்கண் தங்கி = அச்செயலின் கண் மனம் மொழிகளை முற்றுமாக ஈடுபடுத்தி; செல்வார்க்கு = பகைமேற்செல்வார்க்கு.

**இலக்கணம்:** செல்வார் - வினையாலணையும் பெயர்.

**3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**

**இடைக்கண் முரிந்தார் பலர்.**

**அருஞ்சொற்பொருள்:** உடைத்தம் = தம்முடைய; இடைக்கண் - நடுவிலேயே. ஊக்கம் = மன எழுச்சி; ஊக்கி = செயலைத் தொடங்கி, முரிந்தார் – அழிந்தவர் (தோற்றவர்)

**4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**

**வியந்தான் விரைந்து கெடும்.**

**அருஞ்சொற்பொருள்:** ஆங்கு அமைந்து ஒழுகான் = அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகாது; அளவறியான் = தன்வலிமையின் அளவை அறியாது; தன்னைவியந்தான் = தானே தன்னை உயர்வாகக் கருதிச் செருக்குறுபவன்.

**இலக்கணம்:** அறியார் – எதிர்மறைவினையாலணையும் பெயர்; ஒழுகான், அறியான் - (முற்றுகள் எச்சப் பொருளில் வந்தன) முற்றெச்சம்.

**5. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்**

**சால மிகுத்துப் பெயின்.**

**அருஞ்சொற்பொருள்:** பீலி = மயில்தோகை; சாகாடு வண்டி; இறும் = முரியும், பெயின் ஏற்றினால், பிறிது மொழிதலணி. - நுவலாநுவற்சி, ஒட்டணி எனினும் அது. ஒருவன் தன் பகைவரை வலிமையற்றவரென்று இகழ்தல் ஆகாது. வலிமையற்றவரேயாயினும் மிகப்பலராக ஒன்று கூடிக் கொள்வாராயின் வலிமையுள்ள அரசனும் அவர்களை ஒரு பொருட்டாக மதியாது இகழ்ந்த காரணத்தால் தோல்வியுற நேரும் என்பது பெறப்பட்டது. இவ்வாறு கவிஞன்தான்

கருதிய பொருளுக்கு ஒத்ததாக வேறொன்றைக் கூறி அப்பொருளைப் புலப்படுத்துவது பிறிது மொழிதலாகும்.

**இலக்கணம்:** பெய்சாகாடு - வினைத்தொகை; சாலமிகுத்து - உரிச்சொற்றொடர்; மிகுத்து – மிகுந்து என்பதன் பிறவினை.

**6. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி**

**னுயிர்க்கிறுதி யாகி விடும்.**

**அருஞ்சொற்பொருள்:** கொம்பர்=இறுதிப்போலி; நுனிக்கொம்பர்=கிளையின்நுனி; அஃதிறந்து=அவ்வளவினைக் கடந்து. இதுவும் பிறிது மொழிதல். பகைவரை வெல்லக் கருதுபவன் தான் செல்லத்தக்க எல்லை வரை மட்டுமே செல்லல் வேண்டும். மாறாக மேலும் மேலும் செல்வானாயின் தன் உயிருக்கும் இறுதி தேடிக் கொள்பவன் ஆவான் என்பது பெறப்பட்டது.

**இலக்கணம்:** கொம்பர் ஈற்றுப்போலி; நுனிக்கொம்பர் - முன்பின்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமைத் தொகை.

**7. ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்**

**போற்றி வழங்கும் நெறி.**

**அருஞ்சொற்பொருள்:** ஆறு = நெறி ; ஆற்றின் = கொடுக்கும் நெறியில்; அளவு அறிந்து = தமக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து.

**இலக்கணம்:** வியங்கோள் வினைமுற்று; வழங்கும் நெறி –பெயரெச்சத்தொடர்.

**8. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**

**போகா றகலாக் கடை.**

**அருஞ்சொற்பொருள்:** ஆகு ஆறு –பொருள் வரும் வழி; இட்டிது = சிறியது; போகு ஆறு = செலவழியும் வழி; அகலாக்கடை = பெருகாதாயின்.

**இலக்கணம்:** ஆகாறு, போகாறு வினைத் தொகைகள்; அகலாக் கடை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

**9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**

**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

**அருஞ்சொற்பொருள்:** உளபோல = உள்ளன போல.

**இலக்கணம்:** தோன்றாக்கெடும் - செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம்; வாழ்க்கை – தொழிற் பெயர்.

**10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**

**வளவரை வல்லைக் கெடும்.**

**அருஞ்சொற்பொருள்:** உளவரை = தனக்குள்ள பொருளின் அளவு; தூக்காத = ஆராய்ந்து பார்க்காத; வல்லை = விரைவில்; வளவரை = செல்வத்தின் எல்லை.

## 13. ஒப்புரவறிதல்

**1. கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்**

**டென்னாற்றுங் கொல்லோ உலகு.**

**அருஞ்சொற்பொருள்:** கைம்மாறு = எதிர்பார்த்துச் செய்யும் உதவி; கடப்பாடு = கடமையாய்க் கொண்டு செயல்படல்; மாரி = மழையைத் தரும் மேகம்; (பயன் கருதாது பெய்யும் மழைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்கின்றது? ஆகவே தொண்டுள்ளங் கொண்டவர் செய்யும் உதவிகளும் பயனை எதிர்பார்ப்பதில்லை. எனவே வேற்றுப்பொருள்வைப்பணி மறைந்து வந்தது. கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்னும் பொதுப் பொருளை மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு என்ற சிறப்புப் பொருள் எடுத்துக்காட்டுவதால் வேற்றுப்பொருள் வைப்பணி எனலாம்.

**இலக்கணம்:** வேண்டாக்கடப்பாடு - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். உலகு - இடவாகுபெயர்.

**2. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு**

**அருஞ்சொற்பொருள்:** தாளாற்றி - மிக்க முயற்சி செய்து; தந்த = ஈட்டிய; தக்கார்க்கு - தகுந்தவர்க்கு; வேளாண்மை = உதவி.

**இலக்கணம்:** தந்தபொருள் பெயரெச்சம்; பொருட்டு - குறிப்பு வினைமுற்று; நல்ல - பலவின்பால் வினையாலணையும் பெயர்.

**3. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே**
**ஒப்புரவி னல்ல பிற.**

**அருஞ்சொற்பொருள்:** புத்தேள் உலகம் = (இன்பச் செழிப்புடையதாகக் கருதப்படும்) தேவர் உலகத்தும்; ஈண்டும் = இவ்வுலகத்தும், ஒப்புரவின் = ஒப்புரவைக் காட்டிலும்; நல்லபிற = நல்லனவாய பிறசெயல்கள்.

**இலக்கணம்:** பெறல் – தொழிற்பெயர்; ஈண்டும் – உம்மை எண்ணுப் பொருள்.

**4. ஒத்த தறிவானுயிர் வாழ்வான்; மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

**அருஞ்சொற்பொருள்:** ஒத்தது = உலகநடையறிந்து அதற்கிசையச் செய்வது; செத்தாருள் வைக்கப்படும் = இறந்தாருள் ஒருவனாக் கருதப்படுவான்.

**இலக்கணம்:** அறிவான், வாழ்வான் - வினையாலணையும் பெயர்கள்; மற்றையான் - குறிப்பு வினையாலணையும் பெயர்.

**5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

**அருஞ்சொற்பொருள்:** ஊருணி=ஊர் மக்கள் உண்ணுநீர்க்குளம்; உலகுஅவாம் = உலக நடையை விரும்பிச் செய்யும்; திரு = செல்வம்; அற்று = போலும்; பயன்மரம் = பயன்படும்மரம்; உள்ளூர் = ஊர்நடுவே.

**இலக்கணம்:** பேரறிவு - பண்புத்தொகை; (உவமையணி) அவாம் - அவாவும்; செய்யும் என்னும் எச்சம்; ஊருணி - காரணப்பெயர்.

**6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்**
**நயனுடை யான்கட் படின்**

**அருஞ்சொற்பொருள்:** நயனுடையான் - நல்ல உள்ளமுடையவன் (ஒப்புரவாளன்)

**இலக்கணம்:** பயன்மரம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (பயனைத் தரும்மரம்) (உவமையணி) உள்ளூர் - ஊருள் என்பது முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை.

**7. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்**
**பெருந்தகை யான்கட் படின்**

**அருஞ்சொற்பொருள்:** மருந்தாகி = மருந்தாய்; தப்பா = தப்பாத; மரத்தற்று = மரத்தை ஒப்பது.

**இலக்கணம்:** தப்பாமரம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பெருந்தகை = பண்புத்தொகை.

**8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்**

**அருஞ்சொற்பொருள்:** இடம் = செல்வம்; இடனில் பருவம் = வறுமையுற்றகாலம்; ஒல்கார் = தளரார்; கடன் = முறைமை; காட்சியவர் = அறிவுடையார்.

**இலக்கணம்:** கடனறிகாட்சி - வினைத்தொகை; ஒல்கார் - வினையாலணையும் பெயர்; இல்பருவம் பண்புத்தொகை.

**9. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர**
**செய்யா தமைகலா வாறு.**

**அருஞ்சொற்பொருள்:** நயனுடையான் = ஒப்புரவாளன்; நல்கூர்ந்தானாதல் = வறுமை வாய்ப்படுதல். செய்யும் நீர = செய்யும் தன்மையுடைய ஒப்புரவுகளை, செய்யாது = செய்யப்பெறாது. செய்ய வேண்டியவற்றைச் செய்யாது இருத்தலே ஒப்புரவாளனுக்கு நல்கூர்தலாகும்; அவன் துய்க்க வேண்டியவற்றைத் துய்க்காமலிருப்பது நல் கூர்தல் அன்று என்பதாம்.

**இலக்கணம்:** ஆதல் - தொழிற்பெயர்; நீர - பலவின்பாற் பெயர் (நீர்மை பகுதி) செயும் - செய்யும் என்பதன் தொகுத்தல் விகாரம்.

**10. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து.**

**அருஞ்சொற்பொருள்:** கேடு = பொருள்கேடு; கோள்தக்கது = கொள்ளத்தக்கது.

**இலக்கணம்:** கேடு, கோள் – முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள்.

## 14. செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.
எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**அருஞ்சொற்பொருள்**

செய்ந்நன்றியறிதல் : (தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை)

குறள் 1,2,3 - இவை மூன்று பாட்டாலும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினாற் செய்ததூஉம், பயன்தூக்காராய்ச் செய்ததூஉம் ஆய நன்றிக்குப் பயனாய அளவு இல்லை என்பது கூறப்பெற்றது.

குறள் 4, 5 - இவை இரண்டு பாட்டாலும் மூன்றும் அல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாம் என்பது கூறப்பட்டது.

குறள் 6,7 - இவை இரண்டு பாட்டாலும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாது என்பது கூறப்பட்டது.

குறள் 8 – மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறப்பட்டது.

குறள் 9 – நன்றல்லது அன்றே மறக்கும் திறம் கூறப்பட்டது.

குறள் 10 – செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

1. வையகம் = மண்ணுலகம்; வானகம் = விண்ணுலகம்; ஆற்றலரிது = ஒத்தலரிது; ஈடாகா;
2. ஞாலம் = நிலவுலகம்; நன்றி = நன்மை; உதவி; மாணப்பெரிது = மிகப்பெரிது
3. தூக்கார் = ஆராய்தலிலராய், (பயன் நோக்கார்) நயன் = உதவியாகிய ஈரமுடைமை; தூக்கின் = ஆராயின்.
4. தினை = மிகச் சிறிய அளவு; (தினை = சிறிய அளவினதாய தானிய வகை; பனை = ஒரு பேரளவு.

5. வரைத்து = அளவையுடையது; சால்பு = நிறைபண்பு; தகுதி.
6. மாசற்றார் = குற்றமற்றவர்; கேண்மை = நட்பு.
7. உள்ளுவர் = நினைப்பர்; விழுமம் = துன்பம்; துடைத்தவர் = நீக்கினவர்.
8. நன்று = நன்மை (அறன்) ஆகும்; நன்றன்று = அறமாகாது.
9. இன்னா = தீங்குகள்; உள்ள = நினைக்க; கெடும் = இல்லையாகும் (கெடும்)
10. நன்றி = அறம்; உய்வு = நீங்கும் வாயில் பிராயச்சித்தம்); கொன்ற = சிதைத்த.

**இலக்கணம்**

1. செய்யாமல் - எதிர்மறை வினையெச்சம்; செய்த - இறந்தகாலப் பெயரெச்சம்; வையகமும் வானகமும் – எண்ணும்மை; வையகம் - பூமிக்குக் காரணப்பெயர்; அரிது – ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.
2. காலத்தினால் - உருபு மயக்கம்; பெரிது - ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. ஞாலத்தின் – 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு உறழ் பொருளில் வந்துள்ளது.
3. தூக்கார் – முற்றெச்சம்; தூக்கின் – எதிர்கால வினையெச்சம்.
4. செயின் வினையெச்சம்; தெரிவார் - வினையாலணையும் பெயர்; பனைத்துணையா – 'ஆ' ஆக என்பதன் தொகுத்தல்; சால்பு – பண்புப்பெயர்;
5. வரைத்து – ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று; உதவி வரைத்து – குறிப்புப் பெயர்; சால்பின் வரைத்து – அஃறிணை ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. 'உதவி' என்ற சொல் ஒரே பொருளில் அடுத்தடுத்து வந்ததனால் சொற்பொருட்பின்வருநிலையணி
6. மறவற்க, துறவற்க – எதிர்மறை வியங்கோள் வினை முற்றுகள்.
7. எழுபிறப்பும் – முற்றும்மை; துடைத்தவர் – வினையாலணையும் பெயர்.
8. நன்றி மறப்பது - இரண்டாம் வேற்றுமைத் தொகை; மறப்பது - தொழிற்பெயர் (மறத்தல் என்னும் பொருள் தருவதால்).
9. உள்ள - வினையெச்சம்; கெடும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. செயினும் – 'உம்' இழிவு சிறப்பு.
10. கொன்றார் –வினையாலணையும் பெயர்; கொன்ற –பெயரெச்சம்.

## 15. சான்றாண்மை

(பண்புகளால் நிறைந்து நிற்றல்)

**1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

பொருள்: நல்ல குணங்களால் நிறைந்து வாழும் சான்றோர் நல்லவற்றையெல்லாம் தம் கடமையென மேற்கொண்டு வாழ்வர்.

**சொற்பொருள்:** கடன் – கடமை.

**இலக்கணக்குறிப்பு:** என்ப - பலர்பால் வினைமுற்று; மேற்கொள்பவர் - வினையாலணையும் பெயர்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** அறிந்து – அறி + த் (ந்) + த் + உ. அறி – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ — வினையெச்ச விகுதி.

**2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉ மன்று.**

**பொருள்:** நற்குணங்களால் சிறந்திருத்தலே சான்றோரின் பெருமை. அதனை விடுத்துப் பிற நலன்கள் எவ்வகையிலும் பெருமை சேர்க்காது.

**சொற்பொருள்:** சான்றோர் – நல்ல குணங்கள் நிறைந்தவர்.

**இலக்கணக்குறிப்பு:** உள்ளதூஉம் - இன்னிசையளபெடை; அன்று - குறிப்புவினைமுற்று.

**3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்.**

**பொருள்:** அன்புடைமை, நாணம், பிறர்க்கு உதவுதல், உயிர்களிடத்து இரக்கம், உண்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

**சொற்பொருள்:** நாண் - நாணம்; ஒப்புரவு - உதவுதல்; கண்ணோட்டம் - உயிர்களிடத்து இரக்கம்; வாய்மை உண்மை.

**இலக்கணக்குறிப்பு:** கண்ணோட்டம் – தொழிற்பெயர்.

அணி : ஏகதேச உருவக அணி

**4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**

**சொல்லா நலத்தது சால்பு.**

**பொருள்:** தவமென்பது பிற உயிர்களைக் கொல்லாமையே; சால்பு என்பது பிறர் குறைகளைச் சொல்லாமையே.

**சொற்பொருள்:** சால்பு – சான்றாண்மை.

**இலக்கணக்குறிப்பு:** கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

அணி : எடுத்துக்காட்டு உவமை அணி.

( இந்நாலு குறட்பாவும் சான்றாண்மையின் இலக்கணத்தைக் கூறுகின்றன. )

**5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**

**மாற்றாரை மாற்றும் படை.**

**பொருள்:** ஒரு செயலைச் செய்பவர்க்கு வலிமை தருவது பணிவுடன் நடத்தலே. அதுவே சான்றோர்க்குத் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றி நட்பாக்குவதற்கு ஏற்ற கருவி.

**சொற்பொருள்:** ஆற்றுவார் – செயல் செய்பவர்; ஆற்றல் - வலிமை; மாற்றார் – பகைவர்.

**இலக்கணக்குறிப்பு:** பணிதல் - தொழிற்பெயர்; ஆற்றுவார், மாற்றார் - வினையாலணையும் பெயர்.

**பகுபத உறுப்பிலக்கணம்:** ஆற்றுவார் – ஆற்று + வ் + ஆர். ஆற்று - பகுதி; வ் - எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. பணிதல் – பணி + தல். பணி – பகுதி; தல் தொழிற்பெயர் விகுதி.

**6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**

**துலையல்லார் கண்ணும் கொளல்.**

**பொருள்:** தம்மைவிட ஆற்றல் குறைந்தவரிடத்து ஏற்பட்ட தோல்வியையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அப்பண்பே ஒருவரின் சான்றாண்மையை அளந்தறிவதற்கான உரைகல் ஆகும்.

**சொற்பொருள்:** துலையல்லார் — ஆற்றலில் குறைந்தவர்; கட்டளை உரைகல்.

**7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**

**என்ன பயத்ததோ சால்பு.**

**பொருள்:** தீங்கு இழைத்தவர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமற் போனால் சால்பென்னும் தகுதியால் எப்பயனும் இல்லை.

**சொற்பொருள்:** இன்னா – தீங்கு; இனிய – நன்மை; செய்யாக்கால் – செய்யாவிடத்து.

( இம்மூன்று குறட்பாவும் சால்பின் பயனைக் கூறுகின்றன. )

**8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**

**திண்மையுண் டாகப் பெறின்.**

**பொருள்:** சால்பென்னும் மனஉறுதி உண்டாகப் பெறுமானால் ஒருவனுக்குப் பொருள் இல்லாததனால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது.

**சொற்பொருள்:** இன்மை - வறுமை; இளிவன்று - இழிவானதன்று; திண்மை வலிமை.

**இலக்கணக்குறிப்பு:** இன்மை, திண்மை பண்புப் பெயர்கள்.

பிரித்தறிதல் : ஒருவற்கு — ஒருவன் + கு; இளிவன்று - இளிவு + அன்று; சால்பென்னும் – சால்பு + என்னும்.

**9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)**

**ஆழி எனப்படு வார்.**

**பொருள்:** சான்றாண்மை என்னும் பண்பிற்குக் கடலென்று புகழப்படுபவர் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையில் வேறுபடாமல் இருப்பர்.

**சொற்பொருள்:** ஊழி – உலகம்; ஆழி – கடல்.

(இவ்விரு குறட்பாவும் சான்றாண்மையின் சிறப்பைக் கூறுகின்றன.)

**10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**

**தாங்காது மன்னோ பொறை.**

**பொருள்:** சான்றோர்களின் சான்றாண்மைக் குணத்தில் குறைவு ஏற்படுமானால், இவ்வுலகமும் பொறுமை என்னும் தன்பாரத்தைத் தாங்காது.

**சொற்பொருள்:** இருநிலம் – பெரிய நிலம்; பொறை – சுமை.

**இலக்கணக்குறிப்பு:** சான்றவர் - வினையாலணையும் பெயர்; இருநிலம் - உரிச்சொற்றொடர்; மன், ஓ அசைச்சொற்கள்.

(இக்குறள் சான்றாண்மை குறைவதனால் ஏற்படும் இழிவினைக் கூறுகிறது.)

**16. பெரியாரைத் துணைக்கோடல்**

(நன்னெறியில் செலுத்தும் – பேரறிவுடையாரைத் துணையாகக் கொள்ளுதல்)

**1.அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

விளக்கம்: அறிவிலும்,ஒழுக்கத்திலும்,வயதிலும் பெரியவர்களின் நட்பை ஏற்று கொள்ள வேண்டும்.

**2.உற்றுநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

விளக்கம்: தமக்கு வந்த துன்பத்தை நீக்கி துன்பம் வராதவாறு காக்கும் திறமையுடையவரை நட்பாக்கி கொள்ள வேண்டும்.

**3.அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

விளக்கம்: அறிவுமிக்க பெரியோர்களை உறவாக கொள்ள வேண்டும்.அதுவே ஒருவன் பெற வேண்டிய பேறுகளுள் அரிய பேறு ஆகும்.

**4.தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**

விளக்கம்: நம்மை விட பெரியவர்களை நட்பாக்கி கொள்ள வேண்டும்.அதுவே சிறந்த வலிமையாகும்.

**5.சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழந்து கொளல்.**

விளக்கம்: தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் பெரியயோர்களை கண்ணாக கொண்டு நடப்பதால் மன்னனுக்கு அரசபாரம் எளிதாக தோன்றும்.

**6.தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
**செற்றார் செயக்கிடந்த தில்.**

விளக்கம்: பெரியவர்களின் துணை கொண்டு நடப்பவர்களுக்கு பகைவர்களால் எந்த தீங்கும் வராது.

**7.இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்குந் தகைமை யவர்.**

விளக்கம்: தவறுகளை சுட்டிகாட்டும் பெரியவர்களைத் துணையாகக் கொண்டு வாழ்பவர்களை அழிக்க எவருமிலர்.

**8.இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்.**

விளக்கம்: தவறுகளை சுட்டி காட்டும் பெரியவர்களின் துணையை மதிக்காதவன் பகைவர் இல்லை என்றாலும் தானே அழித்து விடுவான்.

**9.முதலிலார்க்(கு) ஊதிய மில்லை மதலையாம்**
**சார்பிலார்க் கில்லை நிலை.**

விளக்கம்: முதலீடு இல்லாத வணிகருக்கு எந்த ஊதியமும் இல்லை,அதுபோல பெரியோர் துணையில்லாதவர்க்கு எந்த நன்மையும் இல்லை.

**10.பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

விளக்கம்: பெரியோர்களின் நட்பை கைவிடுவது பலரை பகைத்து கொள்வதை விட பலமடங்கு தீமை உடையது ஆகும்.

## 17. பொருள் செயல்வகை

(பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்குமான செயல்முறைகள்)

**1.பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.**

விளக்கம்: எந்த தகுதியும் இல்லாதவரை மதிக்க செய்வது பொருள் என்னும் செல்வமாகும்.

**2.இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு.**

விளக்கம்: செல்வம் இல்லாதவரை உலகம் இகழும்,செல்வம் உடையவரை புகழ்ந்து பேசும்.

**3.பொருளென்னும் பொய்யா விளக்கம்**
**எண்ணிய தேயத்துச் சென்று.**

விளக்கம்: செல்வம் என்பது அணையா விளக்கு அது எந்த இடத்திற்கு சென்றாலும் பகைமை என்னும் இருளை போக்கும்.

**4.அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்.**

விளக்கம்: பிறருக்கு தீங்கு செய்யாமல் நல்ல வழியில் சேர்த்த செல்வம்
அறத்தினையும்,இன்பத்தினையும் தரும்.

**5.அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**

விளக்கம்: தவறான வழியில் வந்த செல்வத்தை அனுபவிக்காமல் அழிய விட வேண்டும்.

**6.உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்.**

விளக்கம்: மக்கள் வரி பொருளும்,அரசுரிமையால் வந்த பொருளும்,பகைவரை வென்று கொண்ட பொருளும் அரசனுக்குரிய பொருள் ஆகும்.

**7.அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்**
**செல்வச் செவிலியால் உண்டு.**

விளக்கம்: அன்பு என்னும் தாய் ஈன்ற அருள் என்னும் குழந்தை,பொருள் என்னும் வளர்ப்புத்தாயால் வளர்க்கப்படும்.

**8.குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை.**

விளக்கம்: தன் கையில் பொருளை வைத்து கொண்டு ஒரு செயலை செய்வது,மலையின் மேல் ஏறி யானைப் போரை பார்ப்பது போன்றதாகும்.

**9.செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரிய தில்.**

விளக்கம்: எதிரியை அழிக்கும் கூர்மையான கருவி செல்வமாகும்.அச்செல்வத்தை தேடி சேர்க்க வேண்டும்.

**10.ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொரும்**
**ஏனை யிரண்டும் ஒருங்கு.**

விளக்கம்: நல்ல வழியில் பொருளை சேர்ந்தவருக்கு அறமும் இன்பமும் ஒரு சேர எளிதாகக் கிடைக்கும்.

## 18. வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற.

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

கடைக் கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து.

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

**அருஞ்சொற்பொருள்**

வினைத்திட்பம்: அறமும் புகழும் பயக்கும் தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய் மனத்திண்மை

குறள் 1 - இதனால் வினைத்திட்பமாவது இன்னது என்பது கூறப்பட்டது.

குறள் 2, 3 - இவை இரண்டும் பாட்டாலும் அதனது பகுதி கூறப்பட்டது.

குறள் 4 - இதனால் அதன் அருமை கூறப்பட்டது.

குறள் 5 - இதனால் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

குறள் 6 - இதனால் அஃதுடையார் எய்தும் பயன் கூறப்பட்டது.

குறள் 7 - இதனால் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

குறள் 8,9 - இவையிரண்டு பாட்டாலும் அவர் வினை செய்யுமாறு கூறப்பட்டது.

குறள் 10 - இதனால் வினைத்திட்பமில்லதாரது இழிவு கூறப்பட்டது.

1. திட்பம் = வலிமை; மற்றவை = ஒழிந்தவை; பிற = திண்மையென்று சொல்லப்படா; வினைத்திட்பம் – செயல் செய்வதற்கான மனவலிமை;
2. ஊறு = பழுதுபடும் வினை; ஒரால் = செய்யாமை; ஒல்காமை = தளராமை; ஆறு = நெறி; கோள் = துணிபு;
3. கடை = இறுதியில்; கொட்க = புலப்படும்படி; எற்றா = நீங்காத; விழுமம் = துன்பம்; இடைக்கொட்கின் = இடையே வெளிப்படுமாயின்;
4. செயல் = செய்தல்;
5. வீறு = சிறப்பு; எய்தி = பெற்று; மாண்டார் = மாட்சிமைப்பட்ட அமைச்சர்; உள்ளப்படும் = நன்கு மதிக்கப்படும்; ஊறு எய்தி = நல்ல விளைவை எய்து வித்தலால்.
6. எண்ணிய = எண்ணப்பட்டவை; எய்துப = அடைவர்; திண்ணியர் = வலியர்; 7. உருவுகண்டு = வடிவின் சிறுமை நோக்கி; எள்ளாமை = இகழாதிருத்தல்;

7. கலங்காது = மனந்தெளிந்து; கண்டவினை = துணிந்த வினையிடத்து; துளங்காது = சோம்பலின்றி; தூக்கம் = நீட்டித்தல்; கழிந்து = ஒழிந்து; செயல் = செய்க.
8. உறவரின் = மிகுந்து வருமாயினும்; துணிவாற்றி = துணிவை நெறியாகக் கொண்டு; செய்க = செய்யவேண்டும்; பயக்கும் = உண்டாக்கும்.
9. வேண்டாரை = கொள்ளாத அமைச்சரை; வேண்டாது = விரும்பாது; உலகு வேண்டாது = உயர்ந்தோர் நன்கு மதியார்.

**இலக்கணம்**

வினைத்திட்பம் - நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; ஏழாம் வேற்றுமைத் தொகை.

1. மனத்திட்பம் – ஆறாம்வேற்றுமைத் தொகை; பிற – பலவின்பால் வினைமுற்றாய் வந்துள்ளது.
2. ஆய்ந்தவர் – வினையாலணையும் பெயர்; ஓரால், ஒல்காமை – தொழிற்பெயர்கள்; கோள் – முதனிலை திரிந்த தொழிற்பெயர்.
3. எற்றா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கொட்க – செயவென்னெச்சம் (கொட்கு – பகுதி)
4. சொல்லுதல் – தொழிற்பெயர்; யார்க்கும் – முற்றும்மை; எளிய – குறிப்பு வினைமுற்று; செயல் – தொழிற்பெயர்; சொல்லிய = பெயரெச்சம்.
5. எய்தி – வினையெச்சம்; மாண்டார் – வினையாலணையும் பெயர்; உள்ளப்படும் – செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று.
6. எண்ணிய - வினையாலணையும் பெயர்; எய்துப - பலர்பால் வினைமுற்று; எண்ணியாங்கு = எண்ணியவாங்கு என்பதன் தொகுத்தல் விகாரம்;
7. கண்டு – வினையெச்சம்; எள்ளாமை - தொழிற்பெயர்; உடைத்து - குறிப்பு வினைமுற்று; பெருந்தேர் – பண்புத்தொகை;
8. கலங்காது, துளங்காது, கடிந்து – வினையெச்சங்கள்; தூக்கம் – தொழிற் பெயர்.
9. செய்க – வியங்கோள் வினைமுற்று.
10. வேண்டாரை – வினையாலணையும் பெயர்; உலகு – இடவாகுபெயர்.

## 19. இனியவை கூறல்

(இனிமை பயக்கும் சொற்களைப் பேசுதல்)

**1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**

**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

பொருள்: அன்பு கலந்து வஞ்சனை இல்லாத மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

சொல்பொருள்: ஈரம் – அன்பு; அளைஇ - கலந்து; படிறு - வஞ்சம்; செம்பொருள் – மெய்ப்பொருள்.

**2. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**

**இன்சொலன் ஆகப் பெறின்.**

பொருள்: உள்ளம் விரும்பி ஒருவருக்குக் கொடுத்து உதவுவது நல்லது; முகம் மலர்ந்து ஒருவரைப் பார்த்து இனிய சொற்களைக் கூறுதல் அதனைவிடவும் நல்லது.

சொல்பொருள்: அகன் அகம், உள்ளம்; அமர் விருப்பம்; அமர்ந்து - விரும்பி; முகன் – முகம்; இன்சொல் - இனியசொல்; இன்சொலன் – இனிய சொற்களைப் பேசுபவன்.

**3. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**

**இன்சொ லினிதே அறம்.**

பொருள்: முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

சொல்பொருள்: அமர்ந்து - விரும்பி; அகத்தான் ஆம் - உள்ளம் கலந்து; இன்சொலினிதே - இனிய சொற்களைப் பேசுதலே.

**4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**

**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

பொருள்: எல்லாரிடமும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுவோரிடம், துன்பம் தரும் வறுமை அணுகாது.

சொல்பொருள்: துன்புறூஉம் – துன்பம் தரும்; துவ்வாமை – வறுமை; யார் மாட்டும் – எல்லாரிடமும்; இன்புறூஉம் – இன்பம் தரும்.

**5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**

**அணியல்ல மற்றுப் பிற.**

பொருள்: பணிவு உடையவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் விளங்குவதே ஒருவனுக்கு உண்மையான அணிகலன் ஆகும். உடல் அழகுக்காக அணியும் பிற எல்லாம் உண்மையான அணிகலன்கள் ஆகா.

சொல்பொருள்: ஒருவற்கு – ஒருவனுக்கு; அணி – அழகுக்காக அணியும் நகைகள்.

**6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**

**நாடி இனிய சொலின்.**

பொருள்: பிறர்க்கு நன்மையானவற்றை விரும்பி இனிமை உடைய சொற்களைச் சொன்னால், பாவங்கள் தேய்ந்து குறையும்; அறம் வளர்ந்து பெருகும்.

சொல்பொருள்: அல்லவை – பாவம்; நாடி – விரும்பி.

**7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**

**பண்பின் தலைப்பிரியாச் சொல்.**

பொருள்: பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து, நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

சொல்பொருள்: நயன்ஈன்று – நல்ல பயன்களைத் தந்து; நன்றி – நன்மை; பயக்கும் – கொடுக்கும்; தலைப்பிரியாச் சொல் – நீங்காத சொற்கள்.

**8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**

**இம்மையும் இன்பந் தரும்.**

பொருள்: பிறர்க்குத் துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுபிறவிக்கும் இப்பிறவிக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்.

சொல்பொருள்: சிறுமை – துன்பம்; மறுமை – மறுபிறவி; இம்மை – இப்பிறவி.

**9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

**வன்சொல் வழங்கு வது.**

பொருள்: இனிய சொற்கள் இன்பம் உண்டாக்குவதனைக் கண்டபின்னும், ஒருவன் கடுஞ்சொற்களைப் பேசுவது ஏனோ ?

சொல்பொருள்: இனிதீன்றல் இனிது + ஈன்றல்; ஈன்றல் - தருதல், உண்டாக்குதல்; வன்சொல் – கடுஞ்சொல்; எவன்கொலோ – ஏனோ?

**10. இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.**

பொருள்: இன்பம் தரும் இனிய சொற்கள் இருக்கும்போது, துன்பம் தரும் கடுஞ்சொற்களைப் பேசுவது, கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்பதனைப் போன்றது.

சொல்பொருள்: கவர்தல் - நுகர்தல்; அற்று - அதுபோன்றது. (முன்பு படித்தது நினைவில் இருக்கிறதா? 'வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று'.)